

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வளையற்கார நகராட்சி நடுநிலைப்பள்ளியில் நவீன கணினி ஆய்வகத்தினை திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்து பார்வையிட்டனர். இதில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா, தாராபுரம் நகர்மன்றத்தலைவர் கு.பாப்புக்கண்ணன், நகராட்சி ஆணையாளர் சரவணக்குமார், சட்டமன்ற பார்வையாளர் கணேஷ், நகர செயலாளர் எஸ்.முருகானந்தம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேந்தாக்குடி ஊராட்சி, வெள்ளக்கொல்லை கிராமத்தில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.14 லட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (29.05.2025) திறந்து வைத்தார்.

## நகைக் கடன்களுக்கு ரிசர்வ் வங்கி கட்டுப்பாடு!

# ஏழை, எளிய மக்களை வெகுவாகப் பாதிக்கும்!

### கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

**சென்னை, மே 31–**

**''நகைக் கடன்களுக்கு ரிசர்வ் வங்கி விதித்திருக்கும் கட்டுப்பாடு ஏழை, எளிய மக்களை வெகுவாகப் பாதிக்கும்'' என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமைச் செயலகத்தில் ஆய்வுக்கூட்டத்தை முடித்து செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு:

தமிழக அரசின் பல்வேறு துறைகளில் மக்களோடு தொடர்புடைய அன்றாடம் மக்களுக்கு சேவை செய்கின்ற ஒரு துறை கூட்டுறவுத்துறை என்றால் அது மிகையாகாது. ஆகவே அந்த கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட வேண்டும், குறைகள் இல்லாமல் கூட்டுறவுத்துறை செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்கள். அந்த அடிப்படையிலே தான் இந்த துறையும் நம்முடைய செயலர் சத்தியபிரதா சாகு, மற்றும் பதிவாளர் டாக்டர்.க.நந்தகுமார். கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) எஸ்.பிஅம்ரீத் உள்ளிட்ட அனைத்து நிலையிலான அலுவலர்களின் ஒத்துழைப்போடும், கண்காணிப்போடும், இத்துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.



கடந்த காலங்களில் இருந்ததை விட நடப்பு காலங்களில் நல்ல முன்னேற்றங்களையும், சாதனைகளையும் இந்தத் துறை படைதிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட அந்த துறை நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரை ஒட்டி கூட்டுறவுத்துறையின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட 49 அறிவிப்புகள் அறிவிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் மற்ற பணிகளும் அங்கே நிறைவேற்றப்பட இருக்கிறது.

எனவே அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்புகளில் எந்த நிலையில் அந்த திட்டங்கள் உள்ளன என்பதை நாங்கள் அறிந்து கொள்வதற்காக நடைபெறுகின்ற ஆய்வுக்கூட்டம் தான் இந்த கூட்டம்.

**ரூ.8 கோடியில் கட்டடம்!**

இந்த கூட்டத்திற்கு வருகின்ற வழியில் குறிப்பாக அடிப்படை கட்டமைப்பு வசதி நிர்வாக ரீதியில் நியாயவிலைக் கடைகளை புதுப்பிப்பது, அதை போல் வங்கியினுடைய கிளைகளை நவீனமயமாக்குவது இப்படி பல பணிகளோடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு சொந்தமான ஒரு இடம் தீவுத் திடல் அருகில் உள்ளது. 8274 சதுர அடி கொண்டது. 49 அறிவிப்புகளில் ஒன்றாக புதிய கட்டம் ஒன்றை அங்கு கட்டி வங்கியின் கிளை ஒன்றையும் பொது மக்கள் பயன்பாட்டுக்கும், ஒரு பல்பொருள் அங்காடி ஒன்றும், ஏ.டி.எம் வசதியும், நியாய விலைக்கடைகள் ஆகிய இவை அனைத்தையும் ஒருங்கினைக்கும் வகையில் சத்தியவாணி முத்து நகர் பகுதியில் (நியாயவிலைக்கடைக்கு வெகுதுரம் செல்வதால்)மக்கள் தேவையினை கருத்தில் கொண்டு ரூ.8 கோடி ரூபாய் மதிப்பில் வெகுவிரைவில் அந்த கட்டிடம் கட்டப்பட உள்ளது.

அதை தொடர்ந்து நடைபெறுகின்ற இந்த ஆய்வு பணிகளில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகளும் செயல்வடிவம் பெற்றுள்ளது. பல்வேறு மாவட்டங்களில் புதிய கட்டிடங்கள், நவீனமயமாக்கல், பிரதான அறிவிப்பாக கருதப்படுகின்ற குறிப்பாக இந்த துறைகளில் அரசு வழங்குகின்ற குடிமைப் பொருட்கள் மற்றும் பிற சலுகைகளை தமிழ்நாட்டில் இருக்ககூடிய இரண்டு கோடியே இருபது லட்சம் குடும்பங்களுக்கும் மேலாக அரசு வழங்குகின்ற பொருட்களை கொண்டுபோய் சேர்க்கின்ற ஒருதான் இந்த கூட்டுறவுத் துறை.

அப்படிப்பட்ட 35000 மேற்பட்ட நியாயவிலைக்கடைகள் மூலமாக அதை செயல்படுத்தி வருகின்றன. இவை நகர்புறம் தொடங்கி கிராமப்புறம் வரை கூட்டுறவு சங்கங்களின் மூலமாக பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் இவை வங்கி சேவைகளிலும் இத்துறை ஈடுபட்டுள்ளது.

விவசாயிகள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், சாலையோர வியாபாரிகளுக்கும் கடன் உதவிகளை வழங்கி அவர்களின் பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதற்கும் கூட்டுறவுத் துறையின் வங்கிகள் பெரும் சேவைகளை செய்து வருகிறது.

**கடந்த ஆண்டை விட கூடுதலாக சாதனை!**

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இன்னும் கூடுதலாக வர்த்தகம் செய்திட வேண்டும் என்று வங்கிதுறையில் முதலமைச்சர் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் இந்த ஆண்டு ஒரு லட்சத்து பத்தாயிரம் வங்கி பரிவர்த்தனை செய்திட வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அதை எப்படி நாம் சாதித்துவிட முடியுமா? என்ற கேள்வி எழுந்த நேரத்தில் இந்த ஆய்வில் அதனை சோதித்துப் பார்க்கும் போது நன்கு முன்னேற்றம் உள்ளது. கடந்த ஆண்டு முதலமைச்சர் நிர்ணயித்த இலக்கை விட கூடுதலாக சாதித்து இருக்கிறோம்.

76 ஆயிரம் கோடியாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் ஏறத்தாழ ஒரு லட்சம் கோடியாக அதையும் கடந்து உள்ளது.

குறிப்பாக இந்த ஆண்டும் விவசாயிகளுக்கு வழங்கும் கடன், நகைக்கடன், மகளிர் சுயஉதவிக் கடன், விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்குவதையும் கடந்து கால்நடைக்கடன் வழங்குவதற்காக. "விவசாயிகளுக்கு பலம் கால்நடைகள்" அவற்றை பராமரிப்பதற்கு, புதிதாக வாங்குவதற்கு என கடன்கள் வழங்கப்பட்ட உள்ளது அதனை உரிய காலத்தில் திருப்பி செலுத்தினால் வட்டியில்லாக் கடனாக வழங்க உள்ளது.

**கூட்டுறவு வங்கிகள் மகத்தான சாதனை!**

ஆகவே பொருளாதார வளர்ச்சி அடித்தட்டில் இருந்து வர வேண்டும். கிராமங்களில் இருந்து வர வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஆண்டு 17 ஆயிரம் கோடி ரூபாய் பயிர் கடன் வழங்குவதற்காக முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்கள். வங்கி சேவைகளிலும் மகத்தான சேவைகளை படைத்து கொண்டு இருக்கிறது இந்த கூட்டுறவுத் துறை.

**கேள்வி:** நியாயவிலைக் கடைகளில் பணியாளர்கள் குறைவாக இருப்பதால் ஒரு நபரே 3 கடைகளை பார்க்க வேண்டியுள்ளது.?

**அமைச்சர் :** இதுவரை 12000 நபர்கள் இந்த துறையின் சார்பாக பணி அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்கள். இதன் மூலமாக பற்றாக்குறையே இல்லாத துறையாக இந்த துறை உள்ளது.

பகுதி நேரக் கடை என கேட்டு வாங்கி பணிசெய்வதாக இருக்குமே அல்லாமல் ஒரு நபர் 3 கடைகளை பார்க்கும் நெருக்கடி இல்லை.

**கேள்வி:** நகைக்கடன்களுக்கு மத்திய அரசு பல்வேறு கட்டுப்பாடு விதித்துள்ளது இது கூட்டுறவு வங்கிகளுக்கு பொருந்துமா?

**அமைச்சர் :** ரிசர்வ் வங்கி விதித்து இருக்கும் கட்டுப்பாடுகள் பாதிக்கும், ஆனால் இது கூட்டுறவு வங்கிகளை வெகுவாக பாதிக்காது. விலைமதிப்பில் 75 % கொடுக்கலாம் என்று சொல்கின்றார்கள். அதை தான் நாம் செய்து கொண்டு இருக்கிறோம். ஆனால் ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்களை இது வெகுவாக பாதிக்கும்.

இதை அறிந்த நம் முதலமைச்சர் நடுத்தர மக்களையும் விவசாயிகளையும் பாதிக்கின்றது என அறிந்து நிதி அமைச்சர் அவர்களுக்கு இதை திரும்ப பெற வேண்டும் என கடிதம் எழுதியிருக்கிறார்கள் வழியுறுத்தியிருக்கிறார்கள்.

**கேள்வி:** முதல்வர் மருந்தகத்தின் ஆய்வு பணியினை அதிகாரிகள் மேற்கொள்கின்றார்களா?

**அமைச்சர்:** இன்றைய ஆய்வுகளில் பிரதான கருத்தாக முதல்வர் மருந்தக திட்டம் பற்றி ஆய்வுக்கூட்டத்தில் ஆராய்ந்து அறியப்பட்டது.

ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து படிப்படியாக எல்லா இடத்திலும் வர்த்தகம் என்பது வந்து செல்லக்கூடிய மற்றும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து கொண்டுதான் இருக்கிறது. நல்ல வரவேறபு உள்ளது என்பதற்கான அடையாளம் தான் இந்த வளர்ச்சி. வியாபாரம் கூடியுள்ளது. வாடிக்கையாளர்கள் அதிகரித்துள்ளார்கள்.

**கேள்வி:** எல்லா மாவட்டங்களையும் ஒருங்கிணைத்த காய்கறி வழித்தடம் அது எந்த அளவிற்க்கு செயல்பாட்டில் உள்ளது?

**அமைச்சர்:** நெருக்கடி காலங்களில் அதை எல்லாம் சம்மாளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தேவை ஏற்படும் காலத்தில் களத்தில் இறங்கி நாம் செய்வோம் எல்லாம் ஒரு சீராய் சென்று கொண்டு இருக்கிறது. அவசரம் ஏற்படுமாயின் நாம் செய்து கொள்ளலாம்.

**கேள்வி:** எத்தனை பெட்ரோல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.?

**அமைச்சர்:** இதுவரை 60 பெட்ரோல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இன்னும் 40 விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேட்டியளித்தார்.

## ஆலத்தூர் வட்டம் - கொளக்காநத்தத்தில் இருபாலருக்கான புதிய அரசு கலை அறிவியல் கல்லூரி தொடக்கம்!

# தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கல்லூரி மேம்பாட்டிற்காக ரூ.1 கோடி நிதி!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர், மே 31-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளிக்காட்சி மூலம் பெரம்பலூர் மாவட்டம் கொளக்காநத்தம் உள்பட 11 மாவட்டங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளை (26.05.2025 அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியினை கொளக்காநத்தம் மேல்நிலைப் பள்ளியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், ஆலத்தூர் முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நேரலை நிகழ்வை பார்த்து, வகுப்பறையில் குத்து விளக்கேற்றி இனிப்புகளை வழங்கினர்.

பின்னர், இந்கிழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்ததாவது

தமிழ்நாட்டில் கல்விக்கண் திறந்தவர் காமராசர் என்பதைப்போல, உயர் கல்விக் கண் திறந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் உயர்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், அதிக கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் உருவாக்கப்பட்டது. அவரின் வழியில் நல்லாட்சி நடத்தி வரும் நம் முதலமைச்சர் அவர்கள், கல்வி ஒன்றே யாராலும் அழிக்க இயலாத சொத்து என்பதை உணர்ந்து நம் தமிழ்நாட்டில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

தமிழ்நாட்டில் உயர் கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப படைப்புகள், தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன் மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகையாக வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைககள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகின்றது. இந்த ஆண்டு முதல் கல்லூரி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசு பள்ளிகளில் 10,11, மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் எளிதில் தேர்ச்சி பெறும் வகையில் "தேர்வை வெல்வோம்" என்ற தொகுப்பு எனது சார்பில் அனைவருக்கும் வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு முதல் பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் என 4 தொகுதிகளுக்கும் "தேர்வை வெல்வோம்" என்ற புத்தகத் தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. மாணவ மாணவிகள் படித்தால் மட்டும் போதாது, படித்தவுடன் அவர்களுக்கு தேவையான வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் குன்னம் பகுதியில் கலைஞர் கணினி மையம் தொடங்கப்பட்டு, 60க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் டேலி (TALLY) பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு 11 மாவட்டங்களில் புதிய அரசு கலை அறிவியல் கல்லூரிகளை தொடங்கி வைத்துள்ளார்கள். அதில் நமது மாவட்டத்தில் கொளக்காநத்தம் போன்ற பின்தங்கிய பகுதியில் இந்த அரசு கலை அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டிருப்பதன் நோக்கம், கிராமப்புற ஏழை, எளிய மாணவ மாணவிகளுக்கும் உயர்கல்வி எளிதில் கிடைக்க வேண்டும் என்பது தான்.

வணிகவியல், கணினி அறிவியல், உயிர்தொழில்நுட்பவியல், பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியல் உள்ளிட்ட 5 பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்ட இந்தக் கல்லூரியில், 280 மாணவ மாணவிகள் பயிலும் வகையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்லூரிக்கான முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் என 6 பேராசிரியர்களும், 5 அலுவலகப் பணியாளர்களும் என 11 பணியிடங்கள் முதற்கட்டமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இணையவழியாக இதுவரை 1820 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

கொளக்காநத்தத்திற்கு புதிய அரசு கலை அறிவியல் கல்லூரியினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை மக்களின் சார்பில், மாணவ மாணவிகளின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்தக் கல்லூரி அமைய பரிந்துரை செய்த உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தக்கல்லூரியை பெறுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்த முன்னாள் ஆலத்தூர் ஒன்றியக்குழுத்தலைவர் என். கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கல்லூரியின் மேம்பாட்டிற்காக சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.1 கோடி நிதிஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அனைவருக்கும் சமமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் நம் திராவிட மாடல் முதல்வர் அவர்கள் முன்னெடுக்கும் திட்டங்களை மாணவ, மாணவிகள் முறையாகப் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, கொளக்காநத்தம் மேல்நிலைப் பள்ளியில், தற்காலிகமாக கல்லூரிக்காக அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைகளையும், கல்லூரியில் சேருவதற்கு ஆன்லைனில் மூலம் விண்ணப்பிக்க மாணவ மாணவிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த உதவி மையத்தையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், கல்லூரிக் கல்வி இயக்குநர் பி.பொன் முத்துராமலிங்கம், கொளக்காநத்தம் அரசு கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர். கண்ணதாசன், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி முருகம்மாள்,மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பா.துரைசாமி, முன்னாள் அரசு வழக்கறிஞர் என். ராஜேந்திரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் நகரம் மற்றும் பிள்ளாநல்லூர் பேரூரில் வார்டு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பம் அளித்த 150 நபர்களையும் மாவட்ட பொருளாளரும் இராசிபுரம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான ஏ.கே. பாலச்சந்தர், பேரூர் செயலாளர் அ.சுப்ரமணியம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக் ஆகியோர் விண்ணப்பங்களை பெற்று கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் மாவட்டம், உடுமலை ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.17.25 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம், ரூ.3.47 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை, மகாத்மா காந்தி சாலைகள் மேம்பாட்டு திட்டம் MOS MT I 2025கீழ் ரூ.19.95 மட்சம் மதிப்பீட்டில் சுண்டக்காம்பாளையம் மாரியம்மன் கோவில் முதல் கருவண்ணராயன் கோவில் வரை தார் சாலை அமைக்கும் பணிகளை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், உடுமலை மத்திய ஒன்றிய செயலாளர் க.செந்தில்குமார், கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.கே.எம்.தங்கராஜ் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.